| | | |
|---|---|---|
| சாட்சி : PW1<br>பாஸ்கரன் த/பெ.நடேசன் | அ.வ.எண்.263/2015 | 09.04.2026 |

<u>குறுக்கு விசாரணை</u>

1) வா.சா.ஆ.6 ஆன 18.10.1968 சவரியம்மாள், குண்டுமணி அம்மாளுக்கு எழுதி கொடுத்த கிரையப்பத்திரத்தில் புல எண்.382ல் 34 செண்ட்டில் 10 செண்ட் எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரிதான். வா.சா.ஆ–7 ஆன 06.11.1970, குண்டுமணி அம்மாள், ஜெயலெட்சுமியம்மாளுக்கு எழுதி கொடுத்த கிரையப்பத்திரத்தில் புல எண்.382/3ல் 34 செண்ட்டில் டிசமல் 10ல் கிழமேல் காலடி 46 தென்வடல் காலடி 23 கொண்ட ஒரு ஓட்டுவில்லை கட்டித்தை விற்பனை செய்துள்ளார் என்றால் சரிதான். வா.சா.ஆ.8 ஆவணம் சவரியம்மாள் குண்டுமணியம்மாளுக்கு எழுதி கொடுத்த கிரையப்பத்திரத்தில் புல எண்.382/3, டிசமல் 34ல் 901 சதுரடி விற்பனை செய்துள்ளார் என்றால் சரிதான். வா.சா.ஆ.9ல் சிங்காரம் வகையறாவினர் ஜெயலெட்சுயம்மாளுக்கு எழுதி கொடுத்த கிரையப்பத்திரத்தில் புல எண்.382/3, 34 செண்ட்டில் எங்கள் பாகம் 10ல் 3459 சதுரடி விற்பனை செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.10 ஆவணத்தில் ராஜாகன்னு வகையறாவினர் எனது அம்மா ஜெயலட்சுமிக்கு புல எண்.382/3ல் 34 செண்ட்டில் 12 செண்ட் எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரிதான்.

2) வா.சா.ஆ.11, 12 மற்றும் 13 ஆகிய ஆவணங்கள் வழக்கு சொத்திற்கு சம்பந்தபட்டவை அல்ல என்றால் சரிதான். மேற்படி ஆவணங்களில் கண்ட சொத்துகளானது தாவா சொத்துக்களின் நான்கெல்லைகள் இல்லை என்றால் சரிதான். புல எண்.382/3ல் மொத்த

விஸ்தீரணம் 34 செண்ட் என்றால் சரிதான். மேற்படி புல எண்.382/3 என்பது 16/3 ஏ, 3 பி, 3 சி, 3 டி என புதிய சர்வே எண் கொடுக்கப்பட்டுள்ளது என்றாலும் அதன் மொத்த விஸ்தீரணம் 34 செண்ட் என்றால் சரிதான். எனக்கு மேற்படி மொத்த விஸ்தீரணம் 34 செண்ட்டில் எனது அம்மா வழியாக 22 செண்ட் பாத்தியப்பட்டதாகும். மேற்படி 22 செண்டும் 16/3 சி மற்றும் 16/3 டி –ல் கட்டுப்பட்டதாகும். மொத்த 34 செண்ட்டில் எங்களுக்கு பூர்வீகமாக சொத்து எதுவும் கிடையாது கிரையம் பெற்ற 22 செண்ட் மட்டுமே எங்களுக்கு பாத்தியப்பட்டதாகும். புல வரைபடத்தின்படி புலத்தில் மொத்தம் 38 செண்ட் நிளம் உள்ளது என்றாலும், கூடதலாக 4 செண்ட் உள்ளதால் அதன் தொடர்பாக நான் நடவடிக்கை எடுத்தேனா என்றால் என்னுடைய 22 செண்ட் சரியாக இருப்பதால் நான் நடவடிக்கை எடுக்கவில்லை. வருவாய்த்துறை ஆவணங்களான புல வரைபடம், கணினி பட்டா மற்றும் பட்டா ஆகியவை அளவுகள் தவறாக உள்ளதால் அதன் அடிப்படையில் தாவா சொத்து குறித்து நான் எந்த பரிகாரங்கள்கோர முடியாது என்றால் சரியல்ல. அதனால் அ.வ.எண்.263/2015 தள்ளுபடி செய்ய வேண்டும் அ.வ.எண்.133/2015 அனுமதிக்க வேண்டும் என்றால் சரியல்ல.

**Signed,**

சாட்சி சொல்ல சொல்ல திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சி சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையெழுத்திட்டார்

PRAGATHEESHWARAN SUBRAMANIAN

Digitally signed by PRAGATHEESHWARAN SUBRAMANIAN

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
இலால்குடி.